www.Padasalai.Net www.CBSEtips.in

திண்டுக்கல்

9 - ஆம் வகுப்பு அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2022

காலம் : 2.30 மணி **தமிழ்** மதிப்பெண்கள் : 100

பகுதி – I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி. (கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் சரியான விடையைத் தேர்ந்தெடுத்துக்குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.)** 15 X 1 = 15

1. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலை எழுதிய ஆண்டு. அ) 1984 ஆ) 1856 இ) 1836 ஈ) 1996
2. “மிசை” என்பதன் எதிர்ச்சொல் என்ன ? அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை
3. ஐம்பெருங்குழு, எண்பேராயம் – சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம் அ) திசைச்சொல் ஆ) வடசொற்கள் இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச்சொற்கள்
4. ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
இரண்டறிவதுவே அதனொடு நாவே – இவ்வடிகளில் அதனொடு என்பது எதனைக் குறிக்கிறது. அ) நுகர்தல் ஆ) தொடு உணர்வு இ) கேட்டல் ஈ) காணல்
5. <u>பூவாது</u> காய்க்கும், <u>மலர்க்கை</u> – அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது ? அ) பெயரெச்சம், உவமைத்தொகை ஆ) எதிர்மறைப்பெயரெச்சம், உருவகம் இ) வினையெச்சம், உவமை ஈ) எதிர்மறைப் பெயரெச்சம், உவமைத்தொகை
6. பல்லவர் காலச் சிற்பக் கலைக்குச் சிறந்த சான்று. அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி இ) தாடிக்கொம்பு ஈ) திரிபுவனவீரேசுவரம்
7. சீவக சிந்தாமணியிலுள்ள இலம்பகங்களின் எண்ணிக்கை. அ) 13 ஆ) 12 இ) 15 ஈ) 10
8. நச்சிலைவேல் கோக்கோதை நாடு
நல்யானைக் கோக்கிள்ளி நாடு – இத்தொடர்களில் குறிப்பிடப்படும் நாடுகள் அ) பாண்டியநாடு, சேரநாடு ஆ) சோழநாடு சேரநாடு இ) சேரநாடு, சோழநாடு ஈ) சோழநாடு, பாண்டியநாடு
9. இந்திய தேசிய இராணுவத்தை ..................இன் தலைமையில் ............ உருவாக்கினார். அ) சுபாஷ்சந்திரபோஸ், இந்தியர் ஆ) சுபாஷ்சந்திரபோஸ், ஜப்பானியர் இ) மோகன்சிங், ஜப்பானியர் ஈ) மோகன்சிங், இந்தியர்
10. <u>மல்லல்</u> மூதூர் வயவேந்தே – கோடிட்ட சொல்லின் பொருள் அ) மறுமை ஆ) பூவரசுமரம் இ) வளம் ஈ) பெரிய
11. பொறிமயிர் வாரணம்....... கூட்டுறை வயமாப் புலியொடு குழும–
இப்பாடலடியின் மூலம் மதுரையில் ........................... இருந்த செய்தி அறியலாம். அ) வனவிலங்கு சரணாலயம் ஆ) பறவைகள் சரணாலயம் இ) புலிகள் சரணாலயம் ஈ) யானைகள் சரணாலயம்

பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி:

*அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ*
*வெள்ளம் தீப்பட்ட தென வெரீஇப் புள்ளினம் தம்*
*கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ*
*நச்சிலைவேல் கோக்கோதை நாடு.*

12. பழனம் – என்பதன் பொருள். அ) மண் ஆ) சேறு இ) பழமை ஈ) மிக்கவயல்
13. இப்பாடல் எழுதப்பட்டுள்ள பா வகை அ) வெண்பா ஆ) ஆசிரியப்பா இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா
14. அரக்காம்பல் – இச்சொல்லைப் பிரித்தெழுதுக. அ) அரக்கு + ஆம்பல் ஆ) அரக் + காம்பல் இ) அரக்காம் + பல் ஈ) அர + காம்பல்
15. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் அ) சிலப்பதிகாரம் ஆ) மதுரைக்காஞ்சி இ) சீவகசிந்தாமணி ஈ) முத்தொள்ளாயிரம்

பகுதி – II பிரிவு – 1

**எவையேனும் 4 வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளி (21வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்)** 4 X 2 = 8

16. விடைகளுக்கேற்ற வினா அமைக்க.
அ) சங்குகள் ஈனுகின்ற முட்டைகள் முத்துப்போல் இருக்கின்றன. ஆ) சோழநாட்டில் யானைப்படை வலிமையானது.
17. நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தது ?
18. கனவிலும் இனிக்காதது எவர் நட்பு ?
19. இணைய வழியில் இயங்கும் மின்னணு இயந்திரங்கள் நான்கினை எழுதுக.
20. கருக்கொண்ட பச்சைப்பாம்பு எதற்கு உவமையாகக் காட்டப்பட்டுள்ளது.
21. தலை – என முடியும் குறட்பாவை எழுதுக.

பிரிவு – 2

**எவையேனும் 5 வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளி.** 5 X 2 = 10

22. *மரபுப் பிழை நீக்கி எழுதுக.*
அ) இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை போட்டனர். ஆ) கொடியிலுள்ள மலரை எடுத்து வா.
23. *ஒரு தொடரில் இருவினைகளை அமைத்து எழுதுக.* விரிந்தது – விரித்தது.
24. *கலைச் சொற்கள் தருக.* 1. Indian National Army 2. Sugarcane Juice
25. *ஆகுபெயரை எடுத்தெழுதுக.* அ) மாமாவின் வருகையால் வீடே மகிழ்கிறது. ஆ) நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி.
26. *தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க.* அ) கற்றோருக்குச் சென்ற ...... . ஆ) சித்திரமும் கைப்பழக்கம் ............
27. சமைக்கின்றார் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

28. படங்கள் இணைத்தால் கிடைக்கும் நூல்களின் பெயர்களை எழுதுக.



பகுதி – III பிரிவு – I

2 X 3 = 6

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளி.**

29. டோக்கியோகேட்டஸ் – குறிப்பு வரைக..
30. "என் சமகாலத் தோழர்களே" கவிதையில் கவிஞர் விடுக்கும் வேண்டுகோள் யாது ?
31. **உரைப் பத்தியைப் படித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளி.**
பெரியார் தோற்றுவித்த இயக்கம் சுயமரியாதை இயக்கம். இது 1925ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. பெரியார் குடியரசு, விடுதலை, உண்மை போன்ற இதழ்களை நடத்தினார். ரிவோல்ட் என்ற ஆங்கில இதழையும் நடத்தினார்.
அ) சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர் யார் ? ஆ) பெரியார் நடத்திய இதழ்கள் யாவை ?
இ) இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்புத் தருக.

பிரிவு – 2

2 X 3 = 6

**இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி. (34ஆவது வினாவிற்கு கட்டாயம் விடையளி)**

32. ஏறுதழுவுதல் திணை நிலை வாழ்வுடன் எவ்விதம் பிணைந்திருக்கிறது ?
33. நிலைத்த புகழைப் பெறக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை ?
34. ஒன்றறிவதுவே – எனத் தொடங்கும் பாடலை எழுதுக.

பிரிவு – 3

2 X 3 = 6

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளி.**

35. இயல்புப் புணர்ச்சி மற்றும் விகாரப் புணர்ச்சி விளக்குக.
36. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தோர்
குன்றுவ செய்தல் இலர். – அலகிட்டு வாய்பாடு எழுதுக.
37. துணை வினைகளின் பண்புகள் யாவை ?

பகுதி – IV


5 X 5 = 25

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

38. பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுக்க. (*அல்லது*) நயம் பாராட்டுக.

*வயலிடைப் புகுந்தாய் மணிக்கதிர் விளைத்தாய்*
*வளைந்துசெல் கால்களால் ஆறே!*
*அயலுள ஓடைத் தாமரை கொட்டி*
*ஆம்பலின் இதழ்களை விரித்தாய்*
*கயலிடைச் செங்கண் கருவரால் வாளை*
*கரைவளர் தென்னையில் பாயப்*
*பெயரிடைப் பட்ட வானெனத் தோன்றும்*
*பெருங்குளம் நிறைத்துவிட்டாயே! – வாணிதாசன்.*

39. உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் – தமிழ் ஆங்கிலக் கையடக்க அகராதிகள் பத்துப் பிரதிகளை பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்தாருக்குக் கடிதம் எழுதுக. (*அல்லது*) இணைச் சொற்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுக.
அ) மேடும் பள்ளமும் ஆ) மேலும் கீழும் இ) உயர்வும் தாழ்வும் ஈ) எலியும் பூனையும் உ) மலரும் மணமும்.
40. **விளம்பரம் தயாரிக்க:**
புத்தகத் திருவிழா – செப்டம்பர் 19–28 வரை – சரசுவதி மகால் நூலகம் – தஞ்சாவூர் – நேரம் காலை 8.00 மணிமுதல் 6.00 மணி வரை. தமிழகக் கல்வி அமைச்சர் தொடங்குதல் – மாலை 6.00 மணி புதிய புத்தகம் வெளியிடல் – சிறப்புப் பேச்சாளர் உரை – அனைவரும் வாரீர்! அறிவுத்திறம் பெறுவீர்! புத்தகம் படிப்போம்! புதியன அறிவோம்!
41. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



42. **பின்வரும் உரைப் பத்தியைப் படித்து, கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளி.**
பண்பாட்டுத் தொன்மையும், இலக்கிய வளமையும் வாய்ந்தது தமிழர் வரலாறு. இயற்கையைச் சார்ந்து பிற உயிர்களோடு இணைந்தும் வாழ்ந்தனர் சங்ககாலத் தமிழர்கள். இதற்குச் சங்ககால இலக்கியமான கலித்தொகையில் ஏறுதழுவுதல் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.
அ) தமிழர் வரலாறு எத்தகையது ? ஆ) சங்ககாலத் தமிழர்கள் எத்தகைய வாழ்வு வாழ்ந்தனர் ?
இ) இயற்கையைச் சார்ந்து தமிழர்கள் வாழ்ந்ததற்கான சான்று ஒன்று தருக.
ஈ) ஏறுதழுவுதல் பற்றி எந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. உ) இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்புத் தருக.

பகுதி – V

3 X 8 = 24

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

43. நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை எழுதுக. (*அல்லது*)
தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடுதூது கூறும் காரணங்கள் யாவை ?
44. இசைக்கு நாடு, மொழி, இனம் தேவையில்லை என்பதைச் "செய்தி" கதை மூலம் விளக்குக. (*அல்லது*)
எங்கள் ஊர்ச்சந்தை – என்னும் தலைப்பில் நாளிதழ் செய்தி தயாரிக்க.
45. "நீரின்றி அமையாது உலகு" – என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக. (*அல்லது*)
முன்னுரை : தமிழர்களின் வீர விளையாட்டு – இலக்கியங்களில் ஏறுதழுவுதல் – தமிழர் அறம் – பண்பாட்டு அடையாளம் – நமது கடமை – முடிவுரை.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com